# நவமலர்






வெளியீடு

இந்து இளைஞர் கழகம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம்

2017



உ

சிவமயம்

# நவமலர்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## இந்து இளைஞர் கழகம்,
## வருடாந்த நவராத்திரி வெளியீடு

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 13 ஆம் நாள்**
**29.09.2017**

உ
சிவமயம்

**ஸ்தாபகர் கீதம்**

இராகம் : லதாங்கி

**நாவலரின் சிந்தனையை மனத்துள் வாங்கி**
**பசுபதியார் நாகலிங்கம் இணைவின் பெயரால்**
**வையகமே புகழ்ந்திடவே வளர்க என்று**
**வைத்து பெரும் கற்களால் உருவானதே எங்கள் இந்து**

பாடல் ஆக்கம் :
திரு. பொ. ஞானதேசிகன்

இசையமைப்பு :
திரு. கி. பத்மநாதன்
இசை ஆசிரியர்

**மகுட வாக்கியம்** (Motto)

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

**இந்துவின் நோக்கக் கூற்று** (Vision)

அறமும் அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க இந்துப்
பண்பாட்டுச் சமூகத்தை கட்டியெழுப்புதல்

Buildings up an Ethically, Literally and Virtuously Bound Hindu Traditional Society

**இந்துவின் பணிக்கூற்று** (Mission)

சர்வதேச மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில்
தேர்ச்சியும் செயல்திறனும்,
சுதேசியப்பற்றும் கொண்ட நற்பிரஜைகளை இந்துப்
பண்பாட்டு வழியாக உருவாக்குதல்.

Producing well Disciplined Citizens Possessing Necessary Skills, competence, Humanity and Patriotism required to Copy with Universal Changes, Bound Hindu Traditional Society.




Om Saraswathi Namasthubyam, Vardey
Kaamarpuini, vidhyarambham
Karishyami, Siddhir bhavathu mey sada.

-இந்து இளைஞர் கழகம்-
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ
சிவஞான வைரவர் துணை



# யாழ் இந்துக் கல்லூரி
# சிவஞான எழுந்தருளி வைரவர்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. ஆசிச் செய்தி **பிரம்மஸ்ரீ க. நிரஞ்சனசர்மா** | - | vii |
| 2. அதிபர் ஆசியுரை **ஐ. தயானந்தராஜா** | - | viii |
| 3. வாழ்த்துச்செய்தி **ச. நிமலன்** | - | ix |
| 4. பெருந்தலைவரின்..... **ஆ. ந. தே. ஜெயகுமார்** | - | x |
| 5. தலைவரின் இதயத்திலிருந்து... **கோ. பானுஜன்** | - | xi |
| 6. பஞ்சபுராணம் | - | 01 |
| 7. சிவபுராணம் | - | 04 |
| 8. சகலகலாவல்லிமாலை | - | 08 |
| 9. கௌரி காப்பு | - | 14 |
| 10. சுவாமி விவேகானந்தரின் யாழ் விஜயம் | - | 17 |
| 11. சைவ தர்மம் | - | 19 |
| 12. ஈழத்துச் சைவ ஆலயங்களின் ..... | - | 21 |
| 13. அன்னையைப் போல் ஒரு..... | - | 24 |
| 14. தமிழ், சைவ இலக்கியங்களும்...... | - | 28 |
| 15. கௌரவிப்பு, போட்டிகள் | - | 30 |
| 16. பொருள் உதவி செய்த அடியார்களின் விபரம் | - | 31 |
| 17. நிதி அன்பளிப்புச் செய்த அடியார்களின் விபரம் | - | 32 |
| 18. நவமலர் வெளியீட்டுக்கு உதவிய அன்புள்ளங்கள் | - | 33 |

## இந்து இளைஞர் கழகச் செயற்குழு - 2017



2017 ஆம் ஆண்டு இந்து இளைஞர் கழக அங்கத்துவ உறுப்பினர்கள்



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# இந்து இளைஞர் கழகம்
# செயற்குழு - 2017

**புரவலர்** - திரு. ஐ. தயானந்தராஜா (அதிபர்)

**துணைப்புரவலர்** - திரு. ச. நிமலன் (பிரதி அதிபர்)

**பெருந்தலைவர்** - திரு. ஆ. ந. தேவசகாயம் ஜெயகுமார் (ஆசிரியர்)

**பெருச் செயலாளர்** - திரு. வி. ஜெனகன் (ஆசிரியர்)

**பெரும் பொருளாளர்** - திரு. த. நிஷாந்தன் (ஆசிரியர்)

| | |
|---|---|
| **தலைவர்** | - செல்வன் கோ. பானுஜன் |
| **செயலாளர்** | - செல்வன் யோ. நிவேதன் |
| **பொருளாளர்** | - செல்வன் கி. அனுசன் |
| **உப. தலைவர்** | - செல்வன் இ. கிருசாந்தன் |
| **உப. செயலாளர்** | - செல்வன் ந. துசியந்தன் |
| **விழா அமைப்பாளர்** | - செல்வன் இ. அரவிந்தன் |
| | - செல்வன் க. விதுர்சன் |
| | - செல்வன் ந. கிருஷ்ணராஜ் |
| **பத்திராதியர்** | - செல்வன் சி. ரவிராஜ் |

# 2017 இந்து இளைஞர் கழகம்



திரு. வி. ஜெனகன்
(ஆசிரியர்)



திரு. த. நிஷாந்தன்
(ஆசிரியர்)



செல்வன்
யோ. நிவேதன்



செல்வன்
கி. அனுசன்



செல்வன்
இ. கிருசாந்தன்



செல்வன்
இ. அரவிந்தன்



செல்வன்
க. லிதுர்சன்



செல்வன்
ந. கிருஷ்ணராஜ்



செல்வன்
சி. ரவிராஜ்

## ஆலோசனைக்குழு

திரு. சி. ஜெயபாலன்
திரு. ஆ. நவநீதகிருஷ்ணன்
திருமதி. ஜெ. சத்தியமாலினி
திரு. பா. சற்குணராஜா
திரு. க. சுவாமிநாதன்
திரு. ந. விபுலன்
திரு. தி. சிவகுமாரன்
திரு. ச. அகிலன்
செல்வி அ. காயத்திரி

இந்து இளைஞர் கழகச் செயற்குழு - 2017



2017 ஆம் ஆண்டு இந்து இளைஞர் கழக அங்கத்துவ உறுப்பினர்கள்



# ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மிக நீண்ட வரலாற்றைக் கொண்டு விளங்கும் கல்லூரி. இந்தக் கல்லூரி இந்து சமயத்தையும் தமிழையும் இரண்டு கண்களாகப் போற்றி வருகின்றது. இளைய சமூகத்து நல்வழியை சிறப்பாக வழிபடுத்தி வருகின்றது.

இந்து இளைஞர் கழகம் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது என்றால் அது மிகையாகாது. நவராத்திரி காலத்தில் வருடந்தோறும் நவமலர் எனும் நூல் வெளியிடப்படுவது மிகவும் வரவேற்கத் தக்க விடயம்.



இந்நூல் சிறப்பாக அமைய இறைவன் தாழ்பணிகிறேன். மேலும் இந்து இளைஞர் கழகத்தின் நவமலர் தொடர்ந்து வெளிவர இறைவனின் நல்லாசி கூறி அமைகிறேன்.

'தொண்டர் பணி சிறக்க
ஞானவைரவர் பாதம் பணிகின்றேன்'

**பிரம்மஸ்ரீ க. நிரஞ்சனசர்மா**
ஆலய நித்திய சிவாச்சாரியார்,
சிவஞான வைரவர் ஆலயம்,
யாழ். இந்துக் கல்லூரி.

# அதிபர் ஆசியுரை



இலங்கைத் திருநாட்டில் வரலாற்றுப் பெருமை மிக்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்து இளைஞர் கழகத்தினால் ஆண்டு தோறும் நவராத்திரி காலத்தில் வெளியிடும் நவமலர் எனும் நூலை இந்த முறையும் வெளியிடுவது கண்டு பெருமிதம் கொள்கின்றேன்.

ஒழுக்க விழுமியத்தை வளர்க்கக்கூடிய பாடல்களையும் கட்டுரைகளையும் நவமலர் தன்னகத்தே கொண்டு மாணவர்களுக்கு வழிகாட் டியாக அமைகின்றது. மாணவர்களுக்கு சமய சமூகக் கடமைகள் விருத்தியடைய இது உதவுகின்றது. நவராத்திரிக் காலத்தில் படித்தும் ஓதியும் வழிபாடு செய்வதற்குப் பொருத்தமாக இந்நாள்கள் அமைகின்றன. இக்காலத்தில் நவமலர் வெளிவருவது சிறப்பாக உள்ளது.



சைவப்பாரம்பரியமும் தமிழ்ப் பண்பாடும் வளருவதுடன் மாணவர்கள் ஆன்மீகப் பாதைகளில் செல்வதற்கும் உறுதுணையாக அமையும். நவராத்திரி பெருவிழாவும் நவமலரும் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

**திரு. ஐ. தயானந்தராஜா,**
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் இந்து இளைஞர் கழகம் வருடா வருடம் விஜயதசமி "நவமலர்" வெளியீட்டில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்த நவமலர் வெளியீடானது எமது இந்து அன்னை யின் பெருமைக்கு மேலும் மெருகூட்டும் நிகழ்வாக அமைகின்றது. நவமலரானது மாணவர்களினதும், ஆசிரியர்க ளினதும் எழுத்தாற்றல்களையும் தாமாகவே விடயங்களைத் தேடும் ஆற்றலையும் வளர்த்துவிடும் ஒரு நல்ல செயற்பாடாக இம்மலர் வெளியீடு அமையும் என்பதில் மிகுந்த நம்பிக்கை எனக்குண்டு.



மாணவர்களின் திறன்களை வளர்த்து விடுவதிலும் சமய நம்பிக்கைகளைப் போதிப்பதிலும் உயர் விழுமியங்களைப் போற்றி இறைபக்தியை ஊட்டுவதிலும் கழகத்தின் பணியைப் பாராட்டுகின்றேன்.

இம்மலர் வெளியீடு சிறப்பாக நடைபெற என் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ச. நிமலன்**
பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# பெருந்தலைவரின் உள்ளத்திலிருந்து



யாழ். இந்துக் கல்லூரியின் வருடந்தோறும் வெளிவரும் நவமலர் மணங் கமழ மாணவர்களின் கல்லூரி வாழ்வின் வரலாற்று ஆவணப்பதிவாகவும் "நவமலர்" விளங்குகின்றது.

இந்து இளைஞர் கழகத்தின் செயற்பாட்டில் நவமலர் வெளியீட்டில் உந்துசக்தியாக இருந்து எம்மை ஊக்குவித்த எமது கல்லூரியின் அதிபர் உயர் திரு. ஐ. தயானந்தராஜா அவர்களுக்கு எமது கழகம் என்றும் நன்றிப் பெருக்குடையது.



இந்து இளைஞர் கழகத்திற்கு எந்த வேளையிலும் உறுதுணையாக பிரதிஅதிபர்கள், உபஅதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்விசார உத்தியோகத்தர்கள் முன்னைய காலப் பகுதியில் கல்லூரியில் சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவ சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அவர்களுக்கும் இந்து இளைஞர் கழகத்தின் நன்றியினைத் தெரிவித்து இந் நவமலர் தொடர்ந்த வெளிவர எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானின் இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. ஆ. ந. தே. ஜெயகுமார்**
பெருந்தலைவர்,
இந்து இளைஞர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# தலைவரின் இதயத்திலிருந்து



கல்வியுலகில் பல பெருமை மிகு சாதனைகளைத் தடம்பதித்த எமது இந்துக் கல்லூரித் தாயின் கரங்களில் அண்டு தோறும் தவழ்ந்துவரும் நவராத்திரி வெளியீடான "நவமலர்" இம்முறையும் மலர்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சமயத்தின் உன்னதமான கருத்துக்களையும் எமது கழகத்தின் செயற்பாட்டினைக் கூறுவதே இம் மலரின் நோக்கமாகும். அந்த வகையில் 2017 இல் எமது கழகத்தினால் நேசகரங்களை பற்றியபடி முனைப்போடு இந் நவமலர் உங்கள் கரங்களில் தவழவிடப் பட்டிருக்கின்றது.



இந்து மதம் கூறும் அடிப்படைத் தத்துவத்தின் பிரகாரம் எம்மை நாம் முழுமையாக இறைவனிடம் ஒப்புவித்து அவனை அனுதினம் வழிபட்டு மன ஆசைகளை அகற்றுவோமானால் அகமகிழ்ச்சி, மனஅமைதி, சுகவாழ்வு ஆகியவை வளர்த்து பிறவிப் பெருங்கடலைக் கடக்கக்கூடிய பக்குவம் எமக்கு ஏற்படுவது திண்ணம்.

அந்த வகையில் தரம்மிக்க பல கருத்துக்களை உள்ளிட்ட ஆக்கங்களை தாங்கி வெளிவந்து மணம் பரப்பும் நவ மலரை அனைவரும் படித்து மன அமைதி பெற வேண்டு மென்பதே எமது அவாவாகும்.

**செல்வன் கோ. பானுஜன்**
**தலைவர் இந்து இளைஞர் கழகம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

## 2017 ஆம் ஆண்டு இந்து இளைஞர் கழக அங்கத்துவ உறுப்பினர்கள்



# 2017 ஆம் ஆண்டு இற்றைப்படுத்திய நிகழ்வுகள்







சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
யென்றும் மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த**

**சிவபுராணம்**



திருச்சிற்றம்பலம்

**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்.**

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க*
*வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க*
*புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க*
*கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க*
*சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க*
*ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி*

தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே

காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்துஅறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## GAYATRI MANTHIRAM

Aum

Bhoor Bhuvah Svaha
at SaviWr Yare - unyum
Bhargo _ 0 Devasya Dheemahe
Dhiyo yo Nah pracho -- dayaat

May the All Pervading, Supreme Sun, the Dispeller of Darkness illumine my I ntelligence. May my physical body be purified, may my subtle body be purified. may my causal body be purified".

## ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த
## சகலகலாவல்லிமாலை



திருச்சிற்றம்பலம்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

Saraswathi, Goddes of all Learning: While the Lord of Preservation is asleep and the Lord of Dissolution has gone' crazy. the Lord of Creation is happy in you. his sweet consort. Your abode is the white lotus. But can you not condescend to rest

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

Sweet Goddess of all· Learning Goddess of beautiful breasts and five moded hair; Goddess of slender golden f'igure who rests in the lotus throne; May you graciously make me sing songs in the four metres, songs with beautiful ideas, couched in sweet language

3. அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: The peacock dances in ecstasy on the approach of showers. So also. you rejoice when poets rain showers of song of deep. thmking and Clear expression. When shall I experience the beauty of Tamil, the crystalline nectar in the ocean of your Grace?

4. தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: Ocean of Mercy; You rest 00 the graceful tongues (lips) of poets and preserve the sea of Sanskrit Scholarship and rich heritage of Tamil songs. May you grant that I become proficient in the deep and varied branches of iearning. May you grant me the :gift of singing felicitous songs ..

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: You rest, as on the lotus throne. on the tongue (lips) aud the heart of Brahma, the Creator whose banner depicts the swan which rests on the lotus with the long stalk. Your beautiful soft lotus feet are painted with rouge. Cannot those lotus feet bloom in the cool waters of my heart?

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: You pervade e verything, You pervade the Vedas, the five elements viz: ether. air, fire. water and the earth; You fill the vision and the hearts of your devotees. Grant me this boon; make me proficient in music, in dance, in learning and in singing sweet poems.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: Like the white swan which separates water from milk, you also show. discrimination 1n approving of the songs sung by poets. Grant me your benign look; vouchsafe unto me this boon that all song. meaning of song and the goal of all singing; namely. righteousness. wealth and happiness be integrated in my life.

8. சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

Gorldess of all Learning: You are the giver of the supreme everlasting wealth, namely the imperishable wealth. Laksbmi, who bas her abode in the red lotus cannot bestow this wealth. Grant me eloquence of tongue, skill of' attending to many things simultaneously and the art of singing good songs. Grant me this boon and make me your servant.

9. சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: The female elephant and the queen swan are celebrated for the beauty of their gait, but they pale into insignificance before the graceful gait of your lotus feet. You are the manifest Form of True wisdom that pervades all word and thought. Who can comprehend you?

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

Goddess of all Learning: There are myriads of gods and celestial beings like the Creator. But is there one to equal you, Grant me this boon that all monarchs who rule over the earth, bow unto me the moment I sing my poems.



உ

சிவமயம்

## கௌரிக் காப்பு



திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின்று அருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா.

### வேண்டுதற் கூற்று

*காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே*
*காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே*
*காலமெல்லாம் நின் னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்*
*எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்*
*பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்*
*உண்ணும் உணவாக உயிருக் குயிராக*
*என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்*
*காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்*
*காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்*
*சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே*
*அரியை உடையவளே அம்மாகாளி தாயே*
*கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே*
*அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே*
*சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்*
*பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்*

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளைஅற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியாரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியாரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனிற்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வும் உண்டு
எச்சகத்தி லுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# சுவாமி விவேகானந்தரின் யாழ் விஜயம்



சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலே சொற்பொழிவு ஆற்றி இந்தியா திரும்பிய வேளையிலே இலங்கையில் தரித்துச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. கொழும்புக்கு வந்த சுவாமி விவேகானந்தரை யாழ்ப்பாணம் வருமாறு யாழ்ப்பாண ஆன்மீகத் தலைவர்கள் அழைத்தார்கள். அவர் 1897.01.21 அன்று இந்துக்கல்லூரிக்கு வருகை தந்தார். அவரின் வருகைக்கு யாழ் இந்துக் கல்லூரியில் பெரிய விழா எடுக்கப்பட்டது. பெரும் திரளான மக்கள் அவரின் உரையைக் கேட்க அங்கு கூடினர். அன்று இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபம் முழுமையாகப் பூர்த்தியாகவில்லை என ஒரு சில கருத்துக்கள் உள்ளன. ஆனால் சுவாமி விவேகானந்தர் நின்று உரையாற்றிய இடம் அந்தப் பிரதான மண்டபம் தான்.

சுவாமி விவேகானந்தர் தனது உரையை ஆரம்பிக்கும் போது "நேரமோ சிறிது, ஆனால் நான் பேச உள்ள விடயமோ பெரிது" என ஆரம்பித்தாராம். அங்கு வந்துள்ள பெருந்திரளான மக்களைக் கண்ட சுவாமி விவேகானந்தர் ஓர் இடத்தில் நின்று பேசாமல் அந்த மண்டபம் முழுதும் நடந்து திரிந்து உரையை நிகழ்த்தினார்.

*என்ன அதிசயம் என்றால் அப்போது அதிபராக இருந்த திரு. நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள் 5 ஆசிரியர்களை நியமித்து அவரின் உரையை ஒரு சொல்விடாமல் எழுதச்சொன்னார். இன்று போன்று நவீன உபகரணங்கள் இல்லாத காலம் அது குவளையில் மையை வைத்து குச்சி கொண்டு தொட்டுத் தொட்டு எழுதினார்கள். அந்த ஐந்தில் ஒரு பிரதியை சுவாமி விவேகானந்தர் இந்துக் கல்லூரியை விட்டு இந்தியாவிற்கு மீண்டும் திரும்பும் போது வேண்டிச் சென்றார். அது இந்தியாவிலே ஓரிரண்டு வருடங்களில் "சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயச் சொற்பொழிவு" எனக் கல்கத்தாவில் வெளியிடப்பட்டு இன்றுவரை பாதுகாத்து வரப்படுகின்றது.*

*உரையை ஆங்கிலத்திலேயே ஆற்றிய சுவாமி விவேகானந்தர் ஒரு சிறு பகுதியை தமிழில் கூறி உரையை நிறைவு செய்தார்.*

"இந்து இளைஞர்களே எழுமின்! விழுமின்!
நீங்கள் வலிமையானவர்கள் - மாணவர்களே
தூய சிந்தனை உடையவராகுங்கள்!

நீங்கள் ஒவ்வொருவரும் ஆசிரியர்கள் - ஓர் சூரியன்
நினைத்தாலே பலவற்றைச் சாதிக்க முடியும்
நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால்!"

**செல்வன் யோ. நிவேதன்**
13E (A/L)
**உயிரியற்பிரிவு (2018)**

# சைவ தர்மம்

தருமம் என்பது வாழ்க்கைக்கான சரியான வழி முறையாகச் சொல்லப்பட்டிருக்கும் நீதிநெறி / போதனைகள் ஆகும். இது கொடை, கருணை, தயை போன்ற பல்வேறு பொருத்தமாகும். இந்து சமயத்தை 'சனாதன தருமம்' என அழைப்பர் உலகத்திலுள்ள மனிதர்கள் நீதி நெறியில் வாழ்வது மட்டுமல்லாமல், வான்வெளியில் உலகம் சுழல்வதும், அண்ட சராசரங்கள் ஒரு ஒழுங்கில் இயங்குவதும் தருமம் எனப்படும். இறைவனின் விதிகள் தர்மம் என்கிறது. இந்து சமயம் வேதாந்த சாத்திரங்களின்படி "எது தாங்குகின்றதோ அதுவே தர்மம்" என வரையறை செய்து கூறுகிறது. அன்னதானம், கன்னிதானம், தண்ணீர்பந்தல் எனப் பல வகையாகத் தானங்கள் காணப்படுகின்றன.

**அன்னதானம் செய்தல்**

அன்னதானம் என்றால் பசியுற்றோருக்கு உணவை உவந்து வழங்குவதைக் குறிக்கும். அன்னத்தைத் துவேஷிக்கக்கூடாது, அன்னத்தை மிகுதியாக உண்டாக்க வேண்டும், வருபவர்களுக்கு அன்னம் தயாராக இருக்கிறது எனப் பெரியோர் கூறுவர். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரத ரிஷிகளின் சமூக சிந்தனைதான் தைத்ரிய உபநிஷடத்தில் வரும் எக்காலத்திற்கும் பொருந்தும் சிந்தனை பசியாற்ற பாரதத்தைக் காண விழையும் சிந்தனை. இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் என்ற சிந்தனையால் உருவானதே அன்னதானம்.

'உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர்' என்பதற்கமைய நாம் முடிந்தவரை பிறருக்கு அன்னதானம் செய்தலில் ஈடுபட வேண்டும். அன்னதானம் புரிபவர் மனத் தூய்மையுடனும் உளத்தூய்மையுடனும் அகங்காரமின்றி இதைச் செய்தல் வேண்டும். இளையான்குடிமாற

நாயனார் அன்னதானம் செய்து முத்தியடைந்தவராவார். ஈழத்தில் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலும் தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

**அன்னபூரணி ஸ்லோகம்**

அன்ன பூரணே சதா பூர்ணே சங்கரப் ராணவல்லயே!
ஞான வைராக்ய சித்யர்த்தம் பிக்ஷாம் தேஹிச பார்வதி!!

**தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்**

அன்னதானத்தைப் போன்றே தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாக சாந்தி செய்தலும் மேலான தர்மமாகும். தாகத்தோடு வருவோர்க்கு இல்லையென்று சொல்லாது தண்ணீர் வழங்க வேண்டும் விழாக்காலங்களில் நாம் கோயில்களில் தண்ணீர்ப்பந்தலமைத்து, வருகின்ற அடியார்களுக்குத் தாகத்தைப் போக்கும் தொண்டினை மனத்தூய்மையுடனும் இறைசிந்தனையுடனும் மேற்கொள்ள வேண்டும். அப்பூதியடிகள் தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியவர்களின் தாகத்தை சாந்தி செய்து வந்தார்.

**செல்வன்**
J. **சங்கீதன்** (O/L)



# சங்காபிஷேக நிகழ்வுகள்









## நினைவுப் பதிவுகள்









# ஈழத்துச் சைவ ஆலயங்களின் தொன்மையும் வரலாறும்

திருமூலரால் 'சிவபூமி' எனச் சிறப்பித்து அழைக்கப்பட்டது இலங்காபுரி. இலங்கையில் பண்டைய காலந்தொண்டே சிங்கள, தமிழ் மக்களாலும் தமிழ், சிங்கள மன்னர்களினாலும் சைவ வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. வட இலங்கை, தென்னிலங்கைப் பிரதேசங்களிலும் பரவலாக பண்டைய காலந்தொண்டு சைவசமயம் நிலவியதற்கும் சைவ ஆலயங்கள் காணப்பட்டமைக்கும் தென்னிந்திய, வடஇந்திய நூல்களும், தேவாரப்பதிகங்களும், இலங்கையில் எழுந்த மகாவம்சம், சூளவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை முதலிய நூல்கள் சான்று பகருகின்றன.

இலங்கையின் ஐந்து திசைகளிலும் பஞ்ச ஈச்சரங்கள் அமைந்துள்ளன. வடக்கில் கீரிமலையிலே நகுலாம்பிகா சமேத நகுலேச்சரரும், கிழக்கிலே மாதுமை அம்பாள் சமேத கோணநாயகரும் தெற்கிலே சந்திரசேகரீச்சரரும், மேற்கே வடிவாம்பிகை சமேத முன்னைநாதரும் வடமேற்குத் திசையில் கௌரி அம்பாள் சமேத கேதீச்சரரும் பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்த வண்ணம் உள்ளனர். அதிலும் முன்னேஸ்வர ஆலயம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான 'லங்கா பீடம்' ஆகவும் சக்தி வழிபாட்டில் முன்னிலை பெற்று விளங்குகின்றன. பண்டைய காலந்தொட்டே இந்த ஆலயங்கள் விளங்கியமைக்கு பல்வேறு நூல்களும், கல்வெட்டுக்கள் மற்றும் சாசனங்களும் ஆதாரமாகின்றன.

அநுராதபுர இராசதானி காலத்தில் சிவலிங்க வழிபாட்டு ஆலயங்களும், பிராமணர் வழிபாடுகளை நிகழ்த்தும் இடங்களும் காணப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பொலநறுவைக் காலத்தில் கட்டப்பட்ட பல்வேறு சிவாலயங்களின் சிதைவுகளையும் வானவன்மாதேவி ஈச்சரம், இரகுவில மாணிக்க ஈஸ்வரம், கந்தளாய் விஜயராஜேஸ்வரம் போன்ற சிவாலயங்களையும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இதே காலகட்டத்தில் வடக்கிலும் பல்வேறு

ஆலயங்களும் அமைக்கப்பட்டன. யாழில் நகுலேஸ்வரத்திற்கு அண்மித்ததாக மதுரை இளவரசி மாருதப்புரவீகவல்லியினாலும் அவளது கணவன் உக்கிரசிங்கனாலும் மிகப் பிரம்மாண்டமான அளவில் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமியார் ஆலயம் அமைக்கப்பட்டது.

ஆரியச்சக்கரவர்த்திகள் வடக்குப் பிரதேசங்களை யாழ்ப்பாண இராசதானியாக்கி ஆண்ட காலத்தில் நல்லூரில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயமும் சூழப் பல்வேறு ஆலயங்களும் அமைக்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம் முன்னதாக கால எல்லைகளைக் கணக்கிட முடியாதவாறு இலங்கை முழுதும் நாகலிங்க வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததோடு நாகர் கோவில்களும் காணப்படுகின்றன. நாக வழிபாட்டின் முக்கிய ஒரு சின்னமாக யாழ்ப்பாண மாவட்ட தீவுகளில் ஒன்றான நயினாதீவில் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்து காணப்படுகின்றது. மணிபல்லவம் என்ற சிறப்புப் பெயருடன் விளங்கும் இத்தீவில் அபூர்வ நாகச்சிலையுடன் அம்பாள் இணைந்த மூலவிக்கிரகம் உள்ளது உமையின் இடது காற்சதங்கை சிதறி விழுந்த இடமான இது புவனேஸ்வரி பீடமாக உள்ளது.

அடுத்து தென்மேற்கு இராசதானிகள் காலத்தில் சைவத்தின் நிலைபற்றி நோக்கும் போது சைவம் அங்கும் உன்னத நிலையைப் பெற்றிருந்தமை புலனாகிறது. சீதாவாக்கை வெரண்டி சிவாலயத்தின் சிதைவுகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் இரத்மலானை திருநந்தீச்சரம் அழகிய ஆலயமாக இன்றும் மிளிர்கிறது. அத்துடன் சிலாபத்தில் மானவரி ஈஸ்வர ஆலயமும் அமைக்கப்பட்டது. மிக முக்கியமாக கம்பளை காலத்திலே எம்பக்க தேவாலயம் எனும் முருகன் கோயில் அழகிய மரச்செலுக்கல் வேலைப்பாடுகளுக்கு ஈடிணையற்றதாக அமைக்கப்பட்டது. 6ஆம் பராக்கிரமபாகு காலத்தில் கோட்டைக்குப் புறத்தே அழகிய சிவாலயம் இருந்ததாகவும் அதற்கு தினமும் வாத்திய இசையுடன் தமிழிலே பாசுரங்கள் பாடப்பட்டதாக சலலிஹினி சந்தேசய (பூவைவிடுதூது) நூல் மூலம் அறிய முடிகிறது.

கண்டி இராச்சிய காலத்தில் பல்வேறு ஆலயங்கள் அமைக்கப் பட்டன. நாத தேவாலயம் எனப்படும் சிவாலயம், மாத்தளை பதவிற்ற

ஈஸ்வரன் கோவில், கண்டிக் கதிரேசன் கோயில், கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் மற்றும் ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் என்பன சிங்கள மக்கள் மத்தியில் இன்றும் புகழ்பெற்ற ஆலயங்களாக விளங்குகின்றன. அத்துடன் கண்டிக் காலத்தில் பத்தினித் தெய்வ வழிபாடும் முக்கியம் பெற்றிருந்தது.

இவற்றைவிட கிழக்கிலங்கையில் காலக்கணக்கற்றவாறு பல்வேறு ஆலயங்கள் தோன்றி வளர்ச்சி பெற்று வந்துள்ளன. மாமாங்கேஸ்வரர் ஆலயம் இலிங்கத்தை அடிப்படையாகக் கொண்டது. எனினும் கர்ப்பக்கிரகத்தில் அடியார்களின் கண்ணுக்குத் தெரியுமாறு விநாயகரே அருள்புரிகிறார். மூலஸ்தானக் கடைப்பகுதியில் புராதன இலிங்கம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதை சில வருடங்களுக்கு முன் இடம்பெற்ற கும்பாபிஷேகத்தில் எண்ணெய்க்காப்பு சாத்தச் சென்ற அடியார்களிடமிருந்து அறிய முடிகிறது. அத்துடன் கிழக்கிலங்கையின் மிகப்பிரதான சிவாலயமாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் உள்ளது. கிழக்கில் பிரபல்யம் பெற்ற வேல் கருவறையில் உள்ள வெருகல் சித்திரவேலாயுதர் கோவில், சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோவில், உகந்தை சித்திரவேலாயுதர் கோவில், கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் கோவில், திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில், மண்டூர் முருகன் கோயில் ஆகிய ஆறு கோயில்களும் ஆறு திருப்படைக் கோயில்கள் எனப்படுகின்றன. அத்துன் தாந்தாமலை முருகன் கோவில், களுதாவளைப் பிள்ளையார் கோவில், திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் ஈழத்தின் கலைக்கோயில் எனப்படும். திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் என்பனவும் கிழக்கில் சிறப்புப் பெற்ற ஆலயங்கள் ஆகும்.

இவ்வாறு இலங்கை வரலாற்றை நோக்கும் போது பல்வேறுபட்ட காலகட்டங்களிலும் சைவ சமயமானது மேன்மைபெற்று வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. பல்வேறு சிங்கள மன்னர்கள் காலத்திலும் சைவசமயம் உயரிய உன்னத இடத்தைப் பெற்று வந்திருந்தமை அமைக்கப்பட்ட சைவ ஆலயங்கள் மூலம் புலனாகிறது. சிங்கள மக்களதும், தமிழ் மக்களதும் வரலாற்றில் சைவசமயம் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

**செல்வன் தா. ஜீவசாந் 11F**

# அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை

அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை. அவள் அடிதொழ மறப்பவர் மனிதரில்லை. உயிர்தந்து, உடல்தந்து நம்மை உலகுக்குத் தந்த படைக்கும் கடவுள் அம்மா. அவள் தான் எல்லாம் கடவுளை நேரில் பார்ப்பதில்லை கடவுளாய் நம் முன் நடமாடி நிற்பவர் எம் தாய்

"மண்கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம பல்கோடியுண்டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகலகலா வல்லியே"

என்று குமரகுருபரர் அன்னை சரஸ்வதி தேவியைப் பற்றிக் கூறிய இவ்வாக்கு, கண்கண்ட தெய்வமாக ஒவ்வொரு இல்லத்திலும் குடியிருக்கும் அன்னையர்க்கும் பொருந்தும்.

என்னை ஈன்ற அன்னையே. என்னைப் பெற்று எடுத்தபோது நீ பட்ட வலி என்னவென்பேன். வலி பொறுக்கமுடியாமல் உன் பற்களைக் கடித்தாய். பிரசவ வலியில் துடிதுடித்தாய், கருவிலிருந்த போதே ஊனினை உருக்கி, உடலினை வருத்தி, உதிரத்தால் உணவு தந்து உயிர்கொடுத்தாய். நான் உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்? பேரும்,,புகழும், பொன்னும், பொருளும் தந்து போற்றினாலும் போதாது.

தன் பிள்ளைக்கு வலித்தால் தானும் வலியால் துடிக்கிறாள் பசித்தால் அவளும் தவித்துப் போகிறாள். உதிரத்தைப் பாலாக்கி ஊட்டுகிறாள். வியர்வையும், இரத்தமும் சிந்தி உழைத்து வளர்க்கிறாள்.

தன் மழலை தன் கையால் அளைந்து விளையாடிய எச்சில் சோற்றை அமிர்தமாய் தின்று மகிழ்கிறாள், மூச்சுக்காற்று அடங்கும் வரை தன்பிள்ளை, தன்பிள்ளை என்ற எண்ணத்திலே வாழ்கிறாள். காலம் முழுவதும் தனக்காக வாழாமல் தன் பிள்ளைகளுக்காக வாழும் தாய் பவித்திரமானவள். அவளது அன்பு பவித்திரமானது எனவேதான் தாயின் பாசத்தையும் அன்பையும் நினைத்த மாத்திரத்திலேயே கண்ணில் நீர் பெருகிவிடுகிறது. நம் ஒவ்வொருவருக்கும் நம் அன்னை செய்த தியாகமும், காட்டிவரும் அன்பும், பட்ட கஷ்டங்களும் வார்த்தைகளில் அடங்கமுடியாது.

ஔவை 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்கிறார். வேதம் மாதா பிதாக்களைத் தெய்வமாக நினைக்கச் சொல்கிறது. இரண்டிலும் அப்பாவுக்கு முன்னோடி அம்மாவைத்தான் தெய்வமாகச் சொல்லியிருக்கிறது. தாயாரைத் தெய்வமாக நினைப்பதையே திருப்பி, தெய்வத்தைத் தாயாகப் பாவிக்கும் போதுதான் அம்பாள் என வழிபடுகிறோம். ஏன்? அம்மாவைவிட அன்பானவர்கள் இல்லை. எத்தனை பயம் வந்தாலும் குழந்தை அம்மா என அவளைத் தான் கட்டிக்கொள்கிறது.

தாயன்பைப் போல கலப்படமில்லாத பூரண அன்பை எங்கேயும் காணமுடியாது. பிள்ளை எப்படி இருந்தாலும் தன் அன்பை பிரதிபலிக்காவிட்டாலுங்கூட, தாய் அதைப் பொருட்படுத்தாமல் பூரண அன்பைச் செலுத்திக்கொண்டே இருக்கிறாள். பிறக்கின்றபோதே அம்மாவிடம் தான் ஒட்டிக் கொள்கிறோம். அவள் உயிரில், அவள் உடம்பில் அவள் உணவில் நாம் உண்டாகின்றோம்.

பரமாத்மாவை மாதாவாகப் பாவிப்பது. அதனால்தான் நமக்கு எத்தனை வயதாயிருந்தாலும் அங்கே குழந்தையாகி விடுகிறோம். இப்படிக் குழந்தைத் தன்மையிலுள்ள தெய்வத்தன்மையெல்லாம் நம்மிடம் வருவதற்காகத் தான் பரமாத்மாவை அம்பாளாகப் பாவிக்கின்றோம். எதுவானாலும் அம்மா அம்மா என்று அந்த ஒருத்தியையே குழந்தை பிடித்துக்கொண்டிருக்கிறது. அதுபோல நாம் பரமாத்மாவை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். குழந்தையாகிவிட வேண்டும் என உபநிடதம் உபதேசிக்கின்றது.

'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!' என மாணிக்கவாசகர் சொல்வது இதைத்தான் அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே என்றும் சொல்கிறார். தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை எனத் தாயின் பெருமை பேசியவர் ஔவையார் தன்பிள்ளைக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து தியாகம் செய்யக்கூடியவள் தாய் ஒருத்தியே.

ஒவ்வொரு தாயும் ஒரு மகவைப் பெறும்போது மரண வேதனையை அனுபவிக்கிறாள். மறுபிறவி எடுக்கிறாள். தன் இரத்தத்தைப் பாலாக்கி தரும் ஓர் உன்னதமாக, அற்புதமான சக்தியை கடவுள் மனித உயிர்களில் தாய்க்குத்தான் வழங்கியுள்ளார்.

**"மாதா உடல் சலித்தாள்; வல்வினையேன் கால்சலித்தேன்**
**வேதாவும் கைசலித்து விட்டானே - நாதா**
**இருப்பையூர் வாழ் சிவனே! இன்னம் ஓர் அன்னைக்**
**கருப்பையூர் வராமல் கா"**

எனக் கதறி அழுதவர் பட்டினத்தடிகள்.

கடவுள் தன் பூவுலகில் வந்து செய்ய முடியாத செயல்களை தாய் மூலம் நிறைவேற்றுகிறான் எனக் கூறுவார்கள். ஒவ்வொருநாளும் தன் தாயின் திருவடியை வணங்குபவரை எல்லாத்தேவதையும் ஆசீர்வதிக்கும். கடவுளை வணங்காதவராக, கடவுள் நம்பிக்கை இல்லாதவராக இருந்தாலும் தன் தாயின் திருவடியை வணங்கினால் எல்லாத் தெய்வங்களும் ஆசீர்வதிக்கின்றனவாம். இது இந்து மதம் கூறும் உண்மை.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள்' என்றும்,

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்றும் போற்றினார் வள்ளுவர் பெருந்தகை.

தன் குழந்தைகள் எவ்வளவு தவறுகள் செய்தாலும் அவற்றை எல்லாம் மன்னிப்பவள் தாய் ''இணையில்லாத அன்புக்குரியவள் தாய்'' என்றார். கிருபானந்தவாரியார் இத்தகைய தாயைப் போற்றுவது எம் கடன். அவள் மனம் நோக வைப்பது தகாத செயலாகும். அன்னை சிந்தும் கண்ணீருக்கு இறைவன் உடனுக்குடன் பதில் தந்து கொண்டிருக்கின்றான் என்றனர் ஆன்றோர்கள்.

தாயை அழவிடாதீர்கள். அவள் கண்ணீரை ஆண்டவன் எண்ணிக் கொண்டிருக்கிறான் என்று ஓர் அறிஞர் கூறியிருக்கின்றார். எனவே அன்னையைப் போற்றுவோம். நம்மைப் பிறர் சான்றோன் எனக் கூற வைத்து பெற்ற அன்னைக்குப் பெருமை சேர்ப்போம். எங்கும் பெண்மை பொழியட்டும், எங்கும் தாய்மை ஓங்கட்டும் அங்கும் இறைவன் வாழட்டும் இது அரசர்கள் ஆண்ட பூமி மட்டுமல்ல அன்னையர் ஆண்ட, ஆட்சி செய்து கொண்டிருக்கும் புண்ணிய பூமியும் கூட! எத்தனை கோடி அன்னையர் பூமியில் பிறந்தனரோ அனைவருக்கும் நம் சிரம்தாழ்ந்த வணக்கங்கள்.

**செல்வன் க. கீர்த்திகன்**
**தரம் 10 A**



# தமிழ், சைவ இலக்கியங்களும் அதனால் மேம்படும் விழுமியங்களும்

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். விலங்குகள் போலன்றி மேம்பாடுமிக்க வாழ்க்கையை மனிதன் நடாத்துவதற்கு, நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. மனித வாழ்வை மேம்படுத்த உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியங்கள் எனப்படுகின்றன. இவ் விழுமியங்களை வளர்ப்பதற்காகவே சமய நாயன்மார்கள் பாரிய கஷ்டங்களை எதிர்கொண்டனர். அத்துடன் அதை நிறுத்தாமல் தங்கள் சந்ததியினருக்குக் கடத்தவே தேவாரங்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றை வழங்கியிருக்கின்றனர். இவை தவிர்ந்த ஏனைய பல கருத்துக்கதையும் வழங்கியுள்ளனர். இதற்கு உதாரணமாக மனக்கட்டுப்பாட்டினைப் பேணுவதற்கு ஆறுமுகநாவலர் “மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு....” என்ற கருத்தினை முன்வைத்தார். அவர்மட்டுமன்றி சேக்கிழார் “அளப்படும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக” என்று மனக்கட்டுப்பாட்டின் அவசியத்தைக் கூறியுள்ளார். மனம், வாக்கு, காயம் என்பன திரிகரணங்களாகும். அத்துடன் கல்வியில் உயரவும் மனக்கட்டுப்பாடு தேவை. இதிலிருந்து நாயன்மார், மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கொண்டு இருந்தனர்.

இலக்கியங்கள் நமது வாழ்வை மேம்படுவதற்காகவே உருவானவை என்பதற்கு உதாரணமாக ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்பவற்றைக் குறிப்பிடுவர். இவை எவ்வளவு விழுமியக் கருத்துக்களைக் கூறுகின்றன. அவை மட்டுமா வள்ளுவரின் திருக்குறளினால் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விழுமியங்களும் உண்டு உதாரணமாக “எட்டுணையினும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது” இவ்வரிகள் ஈதலின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. அதில் கூறியது போல ஈதல் செய்தால் நாம் இன்பத்தை உணரலாம் மற்றவருக்குக் கொடுப்பதனில் எம்மிடமுள்ள பொருள் குறைந்துவிடுமே என்று, நாம் அஞ்சத் தேவையில்லை. இறையருளால் அது மேலும்

வளரும் என்பது உறுதி உதாரணமாக இளையான் குடிமாறநாயனாரின் வரலாற்றை எடுத்தோமானால் தினமும் சிவனடியாருக்கு அமுதளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். கடும் வறுமை வந்துற்ற நிலையில், வயலில் விதைத்த நெல்லையே சோறாக்கி அன்னமிட்டதன் மூலம் ஈதலின் சிறப்பை எமக்கு உணர்த்தியுள்ளார்.

அடுத்தது முதியோரைக் கனம் பண்ணுதல் பற்றி உதாரணமாக சிரவணணை எடுத்தோமானால் கண்தெரியாத தன்பெற்றோரை மிகவும் சிரத்தையுடனும் அன்புடனும் பேணி வந்தான். காவுதடி ஒன்றை அமைத்து அதில் முன்பின்னாக, இருவரையும் இருத்தி வேண்டிய இடங்களுக்குச் சுமந்து சென்றான். சிரவணன்ன நாடகத்தைப் பார்த்த காந்தி பிற்காலத்தில் பெரிய மகானானர். இலக்கியங்களால் மகான் காந்தி இந்தியாவின் பிதா என்று அழைக்கப்படுகின்றார். அதுமட்டுமா எமது முன்னோர்களால் பின்பற்றப்பட்ட பழக்க வழக்கங்களைத் தற்போது விஞ்ஞானிகளினால் ஆராய்ச்சி செய்யப்பட்டு அதன் மகத்துவங்கள் தெளிவாக்கிக் கொண்டு இருக்கின்றது. எனவே எம்முன்னோர்களால் பின்பற்றப்பட்ட விழுமியங்களாலேயே இத்தனை வருடம் அவர்களால் ஆரோக்கியமாகவும், சந்தோசமாகவும் வாழமுடிந்திருக்கின்றது. எம் இலக்கியங்கள் நம்மை மட்டும் நேசிக்கச் சொல்லாமல் அனைவரையும் நேசிக்கச் சொல்கிறது. இதற்கு உதாரணமாக கச்சியப்ப சிவாச்சாரியாரின், கந்தபுராணத்தின் ஈற்றில் பாடிய,

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நல்தவம் வேள்வி மல்க!
மேன்மை கோள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

என்ற மங்கல வாழ்த்துப் பாடலைக் குறிப்பிடலாம். இதிலிருந்து விழுமியங்களை ஊன்று கோலாக இலக்கியங்களைக் குறிப்பிடலாம். எனவே நமது இலக்கியங்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

**செல்வன் ப. சேராம்**
தரம் 8E

# போட்டிகள்

நவராத்திரி விழாவை முன்னிட்டு யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்து இளைஞர் கழத்தினால் நாவண்மைப் போட்டி, (தங்கப்பதக்கம்) கோலப்போட்டி, மாலை கட்டும் போட்டி, சகலகலாவல்லி (பாவோதல்) போட்டி, மேற்படி போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு நடைபெற்று தங்கப்பதக்கமும், பாராட்டுப்பத்திரமும் நவராத்திரி இறுதி விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேற்படி போட்டியைத் திறம்பட நடாத்தி ஒத்துழைத்த கல்லூரி ஆசிரியர்களுக்கும் நடுவர்களாகக் கடமையாற்றிய கல்லூரி ஆசிரியர்களுக்கும் இந்து இளைஞர் கழகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கௌரவிப்பு நிகழ்வு

- ஈழத்து, தமிழ்நாட்டு நாதஸ்வர தவில் வித்துவான்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு சிவஞான வைரவப் பெருமான் ஆலய சங்காபிஷேக நிகழ்வைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

# 2017 ஆம் ஆண்டு இற்றைப்படுத்திய கௌரவிப்பு நிகழ்வுகள்






## 2017 ஆம் ஆண்டு இற்றைப்படுத்திய சங்காபிஷேக நிகழ்வுகள்









# இந்து இளைஞர் கழகத்தினூடாக
# சிவஞான வைரவப் பெருமானின் சங்காபிஷேகத்திற்கு
# பொருள் உதவி செய்த அடியார்களின் விபரம்
# 2017

| | | |
|---|---|---|
| 1. திருமதி சு. சுகுனா | - | 1000.00 |
| 2. திருமதி லோ. மனோரஞ்சிதம் | - | 1080.00 |
| 3. திருமதி ஜெ. சத்தியமாலினி | - | 1000.00 |
| 4. திருமதி கு. ஜசிந்தா | - | 1500.00 |
| 5. திருமதி ம. செல்வரட்ணம் | - | 1000.00 |
| 6. திருமதி எஸ். மதிவதனி | - | 1000.00 |
| 7. திருமதி கௌ. ஸ்கந்தராஜ் | - | 1000.00 |
| 8. திருமதி கி. மீரா | - | 1000.00 |
| 9. திருமதி சு. கௌசல்யா | - | 1000.00 |
| 10. திருமதி க. ஞானதயாளன் | - | 1000.00 |
| 11. திருமதி ச. லாவண்யா | - | 1000.00 |
| 12. திருமதி ர. யாழினி | - | 1000.00 |
| 13. திருமதி எஸ். நிரோஜினி | - | 1000.00 |
| 14. செல்வி அ. காயத்திரி | - | 1000.00 |
| 15. திருமதி ம. நாகேஸ்வரன் | - | 1000.00 |
| 16. திருமதி செ. குகவதனா | - | 500.00 |
| 17. திருமதி நி. அனுஷீலா | - | 500.00 |

மேற்படி ஆசிரியர்களினால் இந்து இளைஞர் கழகத்தின் ஊடாக சிவஞான வைரவப் பெருமானுக்கு (16580.00 ரூபா பெறுமதியானவை) ஆலவட்டம் அபிஷேக செம்புகள் போன்றன அன்பளிப்புப் பொருட்களாக வழங்கப்பட்டன.

# இந்து இளைஞர் கழகத்தினூடாக சிவஞான வைரவப் பெருமானின் சங்காபிஷேகத்துக்கு நிதி அன்பளிப்புச் செய்த அடியார்களின் விபரம் -2017

| பெயர் விபரம் | வரவுத் தொகை |
|---|---|
| 1. செல்வி த. செல்லத்துரை | 1000.00 |
| 2. திரு. வ. தவகுலசிங்கம் | 1000.00 |
| 3. திருமதி ம. செல்வரத்தினம் | 1000.00 |
| 4. திரு. வி. தயாபாலன் (அரிசிக் கொள்வனவு) | 11500.00 |
| 4. திரு. சி. ஜெயபாலன் | 1000.00 |
| 5. திரு. சி. ரகுபதி | 1500.00 |
| 6. திரு. கு. பகீரதன் | 2000.00 |
| 7. திரு. நா. விமலநாதன் | 1000.00 |
| 8. திரு. ச. தயானந்தன் | 1000.00 |
| 9. திரு. ந. பரமேஸ்வரன் | 2000.00 |
| 10. திரு. இ. குமரன் | 10000.00 |
| 11. திரு. இ. நிஷாந்தன் | 17000.00 |
| 12. திரு. க. ரவிக்குமார் | 5000.00 |
| 13. திருமதி க. வாமதேவன் | 1000.00 |
| 14. திரு. கி. மயூரன் | 1000.00 |
| 15. திரு. ந. விபுலன் | 500.00 |
| 16. திரு. கோ. ஜெயக்குமார் | 500.00 |
| 17. திரு. வ. கணேசலிங்கம் | 1000.00 |
| 18. திரு. சி. ஞானறஞ்சன் | 1000.00 |
| 19. திரு. வை. விஜிதரன் | 2000.00 |
| 20. கல்லூரி மாணவர் முதல்வர் சபை | 5000.00 |
| 21. திரு. வி. ஜெனகன் | 1000.00 |
| 22. திரு. ஆ. ந. தே. ஜெயகுமார் | 2000.00 |
| 23. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 89519.00 |
| 24. பழைய மாணவர் சங்கம் | 50000.00 |

## நவமலர் வெளியீட்டுக்கு உதவிய அன்புள்ளங்கள்

1. திரு. ஆர்.எஸ். சந்திரகுமார் - **15000/-**
2. திரு சி. சண்முகானந்தன் (உரிமையாளர் ராஜா கீறிம் ஹவுஸ்) - **10000/-**
3. எஸ். சிவகுமாரன் (உரிமையாளர் சிவன் மோட்டார்ஸ்) - **10000/-**
4. திரு. வி. தயாபாலன் - **5000/-**
5. திரு. த. சதீசன் (முகாமையாளர் DFCC வங்கி) - **5000/-**





## சிவஞான வைரவப் பெருமானின் சங்காபிஷேகத்திற்குப் பொருளுதவி புரிந்த அடியார்கள் விபரம் - 2017

| **பெயர்** | **அன்பளிப்புப் பொருள்** |
|---|---|
| திரு. க. சுவாமிநாதன் | 1 மூடை நெல் |
| திருமதி ம. லோகேஸ்வரசர்மா | தேங்காய் |
| திரு. க. பரமேஸ்வரன் | தேங்காய் |
| திருமதி ச. ஜெகதீஸ்வரன் | வெற்றிலை |
| திரு. த. நிஷாந்தன் | வாழையிலை |
| திருமதி கோ. திருமகள் | பஞ்சாராத்தி |
| திரு. நா. சிவச்சந்திரன் | 2 வாழையுடன் குலை (வைரவர் முகப்பு வாயில்) குலை வாழைப்பழம், வாழையிலை. |

அர்ச்சனைப் பொருட்களைக் கல்லூரி மாணவர்களும் தந்துதவினார்கள்.

## யாழ் இந்துவின் நவமலர் மணங் கமழப் பங்களித்த உங்களுக்கு கழகத்தின் உளங்கனிந்த நன்றி


2017ஆம் ஆண்டின் நவமலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்திகள் வழங்கிய சிவஞான வைரவப் பெருமான் ஆலய சிவாச்சாரியாருக்கும் பெரியார்களுக்கும், இந்து இளைஞர் கழகத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வளமானவாழ்வுக்கும் உறுதுணையாக உள்ள அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவ சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கல்விசாரா ஊழியர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும், நவமலரை குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்துதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும்,

இன்னும் பல வழிகளிலும் நவமலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவரிற்கும், எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்துக் கல்லூரியின் சிவஞானவைரவப் பெருமானின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் பணிகின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,<br>யாழ்ப்பாணம்.

இந்து இளைஞர் கழகம்<br>29.09.2017

**சுபம்**



# கல்லூரி கீதம்

வாழிய யாழ் நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தெனறும்


கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே – தமிழர்
தலை நிமிர் கழகமும் இதுவே!

எவ்விடம் மேகினும் எத்துயர் நேரினும்
எம்மண்ணை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல்லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியிவ் வாழிய நீடு.


யோகர் சுவாமிகள்


செல்லப்பா சுவாமிகள்


குடைச் சாமியார்